248 Regd. No. M. 1230. June 1916.

திருவள்ளுவர்.

மாதந்தோறும் வெளிவரும்,

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF SOCIETIES 17 JUL 1916 MADRAS

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி க.] நள-௵ ஆனி-௴. [பகுதி. ௫

நமது பத்திரிகையின் போஷகர்களும், கௌரவ அபிமானிகளும்.

ஸ்ரீமான் என். ஆர். மலையாண்டி செட்டியாரவர்கள்,
உடுமலைப்பேட்டை.

ஸ்ரீமான் எஸ். ஏ. கந்தசாமி பிள்ளையவர்கள்,
மேட்டுப்பாளையம்.

ஸ்ரீமான் வி. எஸ். ராமசாமி அய்யரவர்கள்,
உடுமலைப்பேட்டை.

ஸ்ரீமான் எம் மீனாட்சி சுந்திரம்பிள்ளையவர்கள்,
உடுமலைப்பேட்டை.

பத்திராதிபர்:—கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை
கோயமுத்தூர்.

வருஷசந்தா ரூ 1
தபாற்கூலி அணா 2

வெளிநாட்டுக்கு ரூ 2
தனி சஞ்சிகை அ. 2

இம்மானுவேல் பிரஸ், கோயமுத்தூர்.

உ

கடவுள் துணை.

திருவள்ளுவர்.

தொகுதி க.] நள-௵ ஆனி-மீ [பகுதி ௫.

தமிழ், அதன் நிலைமை, சிறப்பு, அதை கைவிடுவதால் உண்டாகும் குறைவு.

தமிழ், என்னும் பதத்துக்கு, இனிமை என்று பொருள்படும். இத்தமிழ், திராவிட பாஷைகளில் ஒன்றாயும், மற்றைய திராவிட பாஷைகள் யாவத்திற்கும் முந்தியதாயும், அவற்றில் சிறந்ததாயும், சமஸ்கிருதத்திற்கு கீழ் படியாததாயும், பல ஆயிர வருஷங்களாக, தென் இந்தியாவில் வழங்கி வருகின்றது. தற்காலத்து இந்தியாவில் 'குணகடல், குமரி, குடகம், வேங்கடம்' எனும் நான்கு எல்லையுள்ளும், தென்மொழியும், தேன்மொழியுமாகிய இத்தமிழ் மற்றைய பாஷைகளில்நின்று, மேன்மையும், விஸிட்டமும் உள்ள இலட்சணம் அமையப்பெற்றவற்றுள், ஒன்று எனத்துணியப் பின்னிடா. இப்பாஷை, ஈழ தேசத்து வடக்குமாகாணம், கிழக்கு மாகாணங்களில் முக்கியமாயும், மற்றைய மாகாணங்களில் சிறுபான்மையாயும், ரங்கூன், பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும், ஆபிரிகா கண்டத்தின் தென்முனையிலும், வழங்குகின்றது. இத்தகைய வழங்கும் தமிழ்பாஷை, ஐம்பத்து எண்ணாயிரத்து ஐஞ்ஞூறு சொற்களை உடையதாக இருக்கின்றது. இதை ஏறக்குறைய நூற்று நாற்பத்தைந்து லக்ஷம் ஜனங்களினால் பேசப்படுகிறது.

இந்த பாஷை அனாதியாய் இத்தென் இந்தியாவில் உள்ள எல்லாருடைய நாட்டிலும், வீட்டிலும், வழங்கி வருவதான நம் தாய் பாஷையாம். ஓர் வித்வ சிகாமணி சொல்லியதுபோல் நம்மை பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ்; நம்மை தாலாட்டி தூங்கவைத்ததும் தமிழ்;

"குழலினிது யாழினி தென்பர் தம்மக்க
மழலைச்சொல் கேளாதவர்."

என்னும், நாயனர் அமுதவாக்கின்படி, நம்முடைய மழலைச் சொல்லால், நமது தாய் தந்தையரை சந்தோஷிப்பித்ததும் தமிழ்; நம் குழந்தை பருவத்தில் பேச ஆரம்பித்ததும், உச்சரித்ததும தமிழ்; நம்மிட தாய் தந்தையர்கள் நமக்கு பாலோடு புகட்டின தும் தமிழ்; தந்தை, தாய், குரு, முதலானவர்கள், நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ்; ஆதிகாலம் முதல், நம்மிட முன்னேர்கள் எல்லோரும் பேசின பாஷையும், எழுதிவைத்த பாஷையும் தமிழ்; இப்போது நம்முடைய மாதா பிதாக்களும், பந்து ஜனங்களும், இஷ்ட மித்திரர்களும், இதரர்களும் பேசுகிற பாஷையும் தமிழ்; இதன் பெருமையும், சிறப்பும், இவ்வளவு அவ்வளவு என்று வரை யறுக்கமுடியாது.

இத்தமிழ் மாதை, நம் பூர்வீக அரசர்களான, சேர, சோழ, பாண்டியர்களால், தொன்று தொட்டு ஆதரிக்கப்பட்டு தமிழ் மொழித்தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம், என்கிற மூன்று மஹா சங்கங்களில் கூடிய மஹா அநாதி வித்துவான் களை ஒருங்கு சேர்த்து பரிபாலித்து அவரவர் கொடுத்த தொன் னூல், பன்னூல்களை அரங்கேற்றி அவைகளை எழுதிய கவிவாண ருக்கு பரி (செல்வம்)யும், கரி (யானை)யும், குடையும், கொடியும், தனமும், கனமும், காணியும், பூமியும, கணக்கில்லாமல் பரிசு அளித்து அவர்களைப் பாராட்டி, சீராட்டி, பரிபாலித்து வந்ததால் அவர்களும் அவர்கள் புலமையும் பெருகி வளர்ச்சி அடைந்து வந்தது. இந்தப்படி பூர்வீகத்தில் ராஜாக்கள், வித்வ கோஷ்டி களை ஸ்தாபித்து தமிழை வளர்த்து வந்ததுமாத்திரம் அல்ல. தமது அரமனைகளிலே கலா வல்லவர்களாகிய புலவர்களை நியோ கித்து வாசல் வித்வான்கள் என்று பட்டங்கட்டி உம்பளங்கள், சம்பளங்கள் கொடுத்து வித்தியாபிவிருத்தி செய்ததனுல், புஷ் பங்களில் உள்ள மகரந்தங்களைத்தேடி சேணின்று (உயர்ச்சி) வண்டுகள்போல எல்லா திசாமுகங்களிலும இருந்து புலவர்கள் பிரபந்தங்களோடு விரைந்துபோய் மொய்க்க, இராஜாக்கள் அவர் களை ஆதரித்தார்கள்.

ஆனல் மஹம்மதியர், என்று தமிழ் தேசத்துள் கால் மிதித் தனரோ, அன்றே அவர் முன்னிலையில், ஒளி முன், இருளில் மின் னும் புழுக்கு ஒப்பாய் தமிழ்நாட்டு அரசா, திவ்யசோபை மழுங்கி ஒளி இழக்க, தமிழ்மாதும் அட்டமச்சனி வாய்பட்டு, மங்கல சூத்திரத்தைவாங்கி குழியுள் புதைத்து, வைதவ்வியக் கோலம் பூண்டாள்; என்றாலும், யானைக்கு ஒருகாலம் பூனைக்கு ஒருகாலம் என்னுமாப்போல வைதவ்விய நிலையை அனுட்டித்துவந்த அவ

ளுக்கு கன்னிமைப்பருவம் திரும்ப, மங்களகாலம் மறுபடி பெயர்ந்தது. ஆங்கிலேயர் வரவோடு அவள் தலையை நிமிர்த்தி கண்ணீர் தொடைத்து மணக்கோலம்கொண்டு தாலியை எடுத்து தன் களத்தில் தொடுத்தாள். அரசாக்ஷியார் அவளுக்கு தாதியரும், தோழியருமாகி அக்கம் பக்கம் பவனிவர, அச்சியந்திரசாலை ஒரு புறமும், வித்தியாசாலை மறு புறமுமாய் நின்று, கைலாகுகொடுத்து உடன் செல்ல குருச்சந்திரயோகம் பிறந்ததால் அவளும ஒய்யாரமாய் மயிலஞ்சாயலோடு, சர்வாபரண அலங்கிருதமாய் அன்ன நடை நடந்து இனிய மொழிகூறி மறுபடியும் பழையபடியே யாரையும் வசீகரணப் படுத்தத் தொடங்கினள். தேடுவாரின்றி செல்களுக்கு உணவாய் மூலைக்கு மூலை துயின்று, பூசணம் பிடித்து கிடந்த புத்தகங்களை எடுத்து பரோபகாரிகளும், தேசோபகாரிகளும், தொடைதது காத்துப்படவைத்து காலிகித அபத்தம் போக்கி யந்திரங்கள் மூலமாய் வெளியிட்டனர்.

இத்தமிழ்ப்பாஷையில் பல பல விஷயங்களைப்பற்றி கணக்கில்லாத கவிச்சிங்கங்களான கம்பா முதலிய வித்வ சிகாமணிகள், தங்கள் தஙகளுக்கு தோன்றிய உண்மை கருத்துகளைத்தெரிவிக்கும் நூல்களின் மாதுரிய சாதுரிய வசனங்களை எடுத்து சொல்லில் அவை சொல்லிலும் அடங்காது; ஏட்டிலும் அடங்காது; எழுதவும் முடியாது; எம்மாலும ஆகாது; மற்ற எவராலும ஆகாது. இது நிற்க, இமயமலை முதல் கன்னியாகுமரிவரையிலும் உள்ள இப்பரதகண்டமானது நம் காருண்ணிய ஆங்கிலேயர் ஸ்வாதீனத்திற்கு உட்பட்டு நமது ராஜபாஷையாகிய ஆங்கிலேய பாஷை நாளுக்கு நாள் விருத்தியடைந்துக்கொண்டுவருவது 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' தெரிந்த விஷயமே! ஷேக்ஸ்பியர், போப், பேகன், ஸ்பென்ஸர், மில்டன், பர்க், மகாளே, முதலிய வித்வான்கள் எழுதியிருக்கிற அரிய பெரிய கிரந்தங்களைப்போலவே வால்மீகி, வேதவியாஸர், காளிதாஸர், பவபூதி, சங்கராச்சாரியார், ராமானுஜாசாரியார், பட்டுமூர்த்தி, மனு, முதலியோரால எழுதப்பட்ட கிரந்தங்களை, ஜாகிரதையாய் வாசித்துப்பார்த்தால் நமது பரதகண்டததின் ஆசாரமும், கொள்கையும், ராஜதந்திரமும், மதாசார விளக்கங்களும், தெற்றன விளங்கும்.

இத்தகைய தமிழ்பாஷை, நமக்கு சுயபாஷையாய் இருந்தும் பெரும்பான்மையோருக்கு நன்ருகத் தெரியாது. அனேகருக்கு இங்கிலீஷ் பாஷை தெரிந்தளவு தமிழ் தெரியாது. அது சிலர் தமிழில் பேசுவோர்க்கு இங்கிலீஷில் பிரதி உத்தரவு சொல்வதும்,

தமிழிலே தொடங்கி இங்கிலீஷில் முடிப்பதும், நம அனுபோக சித்தாந்தத்தினால் அறியலாம். அவாகள் வாசித்த தமிழ், வருஷப் பிரதிவருஷம் யூனிவர்சிடி பரீக்ஷைகளுக்கு பாடமாக எற்படுத்திய பாகங்களே! அவர்களுக்கு தெரிந்த தமிழ் சொற்களும், அப்பாகங்களில் காணப்பட்டவையே! ஆகையால் தாங்கள் விரும்பிய ஒரு விஷயத்தை தமிழில் ஸ்பஷ்டமாகவாவது, விசிதமாயாவது, சொல்வது அசாத்தியமாகும்.

இக்காலத்தில் ராஜபாஷையாகிய இங்கிலீஷில் எற எற நம்மவர்களுக்கு, நமது சுயபாஷையான தமிழில் மன ஊக்கமும், அபிமானமும, பயிற்சியும், நாளுக்குநாள் நமமில் குறைந்து வருகிறது சகலருக்கும் தெரியவருமே. ஆங்கிலேயபாஷை வாசித்தவரும் மற்றவர்களும் ஒருவர்க்கொருவர் எழுதும் கடிதங்களை ஆயிரம பிழையுடனே யானாலும் இங்கிலீஷிலேயே எழுதிக்கொள்ளுகிறார்கள். ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகிறபோதும் இஙகிலீஷில் பேசுவதே அவர்களுக்கு சம்மதம். இங்கிலீஷில் தேர்ச்சி இல்லாவிடினும், அந்த பாஷையில் பேசுவதை பெருமையாக எண்ணுகிறார்கள். அப்படிக்கு அல்லாமல் தமிழில் எதாவது ஒரு சமயத்தில் பேசும்படி நேரிட்டால் நாழி தமிழுடன குறிணி இங்கிலீஷை கணக்கில்லாமல் கலந்து தமிழை அலங்கோலப்படுத்துகிறார்கள். இப்படிக்கு அவர்கள் சேர்த்து பிரயோகிக்கிற இங்கிலீஷ் வார்த்தைகள் சந்தர்ப்பத்திற்கு எற்றது, அல்லது எற்றது அல்ல, என்பதையும் யோசியாமலே துணிவாய் வழங்குகிறார்கள். அனேகர் தங்கள் சுயபாஷையில் தங்கள் கையெழுத்துகளைக்கூட பிழையில்லாமல் எழுத அஸக்தர்களாய் இருக்கிறார்கள். சிலர் தமிழ்பாஷை தெரியாமல இருப்பது தங்களுக்கு கௌரவமாகவும், அந்த பாஷையை அறிந்திருப்பது தங்களுக்கு அகௌரவமாகவும், எண்ணுகிறார்கள. சுயபாஷா ஞானம தங்களுக்கு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு ராஜபாஷையில் தங்களை சமர்த்தர்களென்று எல்லாரும் எண்ணுவார்களென்று நினைத்து சுயபாஷையை முழுதும அலக்ஷியம் செய்கிறார்கள்.

இங்கிலீஷ் தெரிந்திருப்பது கனமென்று எண்ணுகிறார்களேயன்றி தமிழில் பேசுவதற்குகூட தமக்கு தெரியாமல் இருப்பது குறையென்று அவர்களுக்கு தோற்றவேயில்லை. குழூக்குறியாயிருப்பனவற்றையும், துரைத்தன முறைமையால் நிலைத்த வார்த்தைகளையும் வழங்குவதில் ஆக்ஷேபம் ஒன்றம் இல்லையாயினும் அவசியம் இல்லாமலே தமிழுடன் இஙகிலீஷ் வார்த்தைகளைக்

கலந்து பேசுவதையும், எழுதுவதையும நிதானித்து யோசித்தால் மிகவும் பரிஹாசமாக இருக்கிறது. மனதில் உதிக்கும கருத்தை வாயினுல் தமிழில் சொல்லவாவது எழுத்தினுல் எழுதவாவது கற்றுக்கொள்ளாமல் இருப்பது தமக்கும, தம பாஷைக்கும், முறையே குற்றமென்றும், குறைவென்றும், அவர்களுக்கு தோற்றவில்லையே. தமிழ் வார்த்தைகளின் உச்சரிப்பை அறிந்து பிழையில்லாமல எழுத்துக்கூட்டி எழுதவும், வித்துவான்களாய் இருப்பவர்கள் தவிர மற்றவர் கற்றறியார்களே. இது என்ன வெட்கக்கேடு; அவர்கள்தான் என்னசெய்வார்கள். நம் தமிழ் பாஷையில் தேர்ச்சி அடைந்து ஆங்கிலேயர் இதை அறிந்தால் நமமைப் பரிஹாசம்செய்து கெக்கலிகொட்டி நகை யாரா? தமிழைப் போற்றவேண்டியவர்களுக்கே தமிழினிடத்து இவ்வளவு கௌரவத்தாழ்வு விளைந்தது, என்ன காலவிபரீதமோ அறியோம். ஆங்கிலேயருக்கு, ஆங்கிலேய பாஷையினிடத்தும், துருஷ்கருக்கு துருஷ்கபாஷையினிடத்தும், இருக்கிற அபிமானத்தில் இலக்ஷத்தில் ஒருபங்கு தமிழருக்கு தமிழினிடத்து உண்டானல் தமிழ் சீக்கிரத்தில் சிறப்புற்று ஓங்கும் என்பதற்குச் சந்தேகம் உண்டோ?

நம் தமிழ்பாஷையில் அனேக ஸமைய நூல்களும், நீதிநூல்களும், மற்ற நூல்களும், நாளுக்கு நாள் பயில்வாக்காயின்றி இறந்து வருகின்றன அல்லவா? இவ்விதத்தாழ்வு இன்னும் நீடிக்குமாகில் தமிழ்ப்பாஷை என்பது ஒன்று இல்லாமலும், அவ்விதக்குறைவால் நமது ஸமையமும், ஆசாரமும், தாழ்வுபட்டு அதனுல் நாம் அடையவேண்டிய பேரானந்த நித்திய நிலையாகிய முத்தியும், தத்திப்போகும் அல்லவா? நமது ஆங்கிலேய அரசாக்ஷியார், அன்னிய சமயத்தாராயிருந்தும், அவர்கள் நம்முடைய சுயபாஷைகளும், விருத்தியாக வேண்டுமென்று கல்வி பயில் இடங்களில் விசேஷ முயற்சி செய்துக்கொண்டு வருகிறதும அல்லாமல் நமது சுயபாஷைகளை அவர்களும் அதிக ஊக்கத்துடனும், விடா முயற்சியுடனும், பயின்று வருகிர்கள். அவர்கள் கண்ணோட்டமும், நமது சுயபாஷைகளின்மேல் சற்று சுருங்குமாகில் இப்பத்திரிகை தொடக்கத்துக்கும், இடம் இல்லாமலே நமது சுயபாஷைகள் நெடுங்காலத்திற்கு முன்னமே இறந்து போய் இருக்கலாம் அல்லவா? இந்த குறைபாடுகளைச் சீர்திருத்த யோசித்து பல விஷயங்களையும் திரட்டி, எல்லோருக்கும் தெளிவாய் புலப்படும்படிக்கு எளிய வசனநடையில் இதை பதிப்பிக்கத்தொடங்கி

இதன் பிரயோஜனத்தை அறியாதவர்களாயும், அறிந்தும், பாராட்டாதவர்களாயும், இருக்கின்றனர்

ஆனால் நாம் நடந்துக்கொள்ளவேண்டிய சட்டதிட்டங்கள், நியாயபிரமாணங்கள், இவைகள் ஆங்கிலேய பாஷையில் இருப்பதால் அந்த பாஷையில் நமக்கு விற்பத்தி இல்லாவிடில் அந்த ராஜ்ஜியத்தில் நாம் எப்படி நிர்வஹிக்கக்கூடும்? அவகாஸம் உள்ளவர்கள் சொந்த பாஷைகளோடுகூட அந்த பாஷையையும் படிப்பது அதிக விசேஷந்தான். ஆயினும் மாதா வயிறு எரிய மஹேஸ்வர பூஜை செய்வதுபோல சொந்த பாஷைகளை மட்டும் படிப்பது அனுசிதம் அல்லவா? இப்பேர்க்கொற்ற அருமையான பாஷையை விட்டுவிட்டு அன்னிய பாஷை படிக்கிறவர்கள் சுற்றத்தார்களை விட்டுவிட்டு அன்னியர்களிடத்தில் நேசஞ்செய்கிறவர்கள் போல் ஆகும்.

எவ்வளவுதான் ராஜபாஷையைப் படித்தாலும், அதனால் நம்முடைய சுயபாஷையை கைவிடக் கூடாதென்ற உட்கோளுக்கு ஆங்கிலேயரே சாக்ஷிபகர்வார்கள். அதற்கு திருஷ்டாந்தம் எப்படி எனில் நம்மை இப்போது ஆங்கிலேயர் ஆண்டுவருவது போல் முன் அவர்களையே நார்மன்ஸ் என்னும் ஜாதியார் அடக்கி ஆண்டு வந்தபோது, அவர், ஆங்கிலேய நாட்டில் நார்மன் பாஷையை நிலைநிறுத்தப்பார்த்தும், முடியாமல் ராஜாங்க பாஷையுங்கூட ஆங்கிலேயமாய்த்தான் இருக்கவேண்டுமென்று ஆங்கிலேய ஜனங்கள் தமது சுதேசாபிமானத்தாலும், ஊக்கத்தாலும், ஒற்றுமையாலும், ஒரே பிடியாய் கடைப்பிடித்து சாதிக்கவில்லையா? இந்தப்படி நம் சுயபாஷைகள் கைதாழ்ந்து வருவதற்கு ஆங்கிலேய பயிற்சியே ஒரு காரணமாய் இருக்கின்றது. இங்கிலீஷ் படித்த நம்மவர்கள் சுயபாஷையை மறந்தோ, அல்லது வேண்டுமென்றோ, அல்லது சுயபாஷையை அறியாமல் இருப்பதனால் அத்தனைக்கும, ஆங்கிலேயம் பாடமேறி இருக்குமென்ற பொய்யான அவஸ்தை பாராட்டியோ, அல்லது ஆங்கிலேயம் படித்த முதிர்ச்சியால் தங்கள் வாழ் நாள் அதற்கே போதுமானதாய் மற்றொன்றுக்கு நேரமில்லை என்றவெறுஞ்சாக்கு சொல்லியோ, அதைகைவிடுவதனால் அதற்கு கடைசியாக அவர்களிடமாய் வரக்கூடிய ஒருவிதசகாயமும் அற்றுப்போகின்றது.

இந்தப்படி நம்மிடவர்கள் நம் சுதேச பாஷையான தமிழை நிகிர்ஷ்டம் செய்வது காட்டுத்தேனை விட்டு கள்ளைக்குடித்தது போலவும்; கையில் இருக்கிற குருவியைப் பறக்கவிட்டு பறக்கும்

குருவிக்குக் கையேந்துவது போலவும்; கையில் இருக்கிற சோற்றை போட்டுவிட்டு எச்சில் சோற்றுக்கு கையேந்தினதுபோலவும்; பிள்ளை வரத்துக்குப்போய் புருஷனைப் பரிகொடுத்தவள் போலவும்; நம்மில் உள்ள தமிழையும் கொள்ளை கொடுத்து ஏங்கி நிற்கச்செய்யும், "ஓண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தினதுபோல்" இங்கிலீஷ் பாஷை அளவுகடந்து மேலிட்டு தேச பாஷையின் சீரைக்குலைத்துவிட்டன. அந்த ராஜபாஷை ஜீவனோபாயத்துக்கு மார்க்கமாய் இருக்கிறபடியால் அனேகர் வயிறே பெரிதென்று எண்ணி அந்த பாஷையை மட்டும் அதிக சிரத்தையாய் வாசிக்கிறார்கள். மேலே நாம் சொன்னபடி நமது மாக்ஷிமைதங்கிய கவரன்மெண்டார் முயற்சி இல்லாவிடில் சில வருஷங்களுக்கு முன்னமே நம் தமிழ்பாஷை இருந்த இடம் தெரியாமல் அப்பிரஸித்தமாய் போயிருக்கும்.

இவ்விதமாக தமிழ் பாஷையைக் கைசோரவிட நமக்கு மனம் வரலாமா? "காக்கையும் தன் குஞ்சை பொன் குஞ்சாக பாவிக்க நமது பாஷையை திநே திநே ஓங்கி வளர்ந்தேறச் செய்வது நமது கடமை அன்றோ? தமிழ் இருந்த நிலைமையை நோக்கும் காலத்து "நீ இருந்த உச்சியென்ன நீ விழுந்த பள்ளமென்ன" என ஒருவருடன் சொல்லிக் கொள்ளவேண்டியிருக்கிறதே! நம்மால் கூடியவரையில் நம் தமிழ்பாஷையை வாசிப்போமாக! விருத்தி செய்வோமாக! விசாரிப்போமாக! இது நம் மேல் பாரித்த கடமை அன்றோ.

சுயபாஷையாகிய நம் தமிழ் மங்கையை புரமனை கிடத்தி அரஸ பாஷையாகிய ஆங்கிலேய பாஷா நங்கையை அரமனையில் பஞ்சனை பொலிந்த சப்ரமஞ்சத்தில் படுத்தி அடுக்களை அமமைமாரும் ஆனந்த நிருத்தம் செய்யும் இக்காலத்தில்

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து
திருப்பிலேயிருந்து வைகையேட்டிலே சங்கத் தவழ்ந்தபேதை"

யாகிய தமிழின் பூர்வஸ்திதி துலங்க மடியிடை வைத்து தாராட்டி மனசிடை வைத்து பாராட்டி மதித்து துதிப்போமாக.

கைத்தொழில் முயற்சி.

(முன் தொடர்ச்சி)

நாம் மேற்குத்தேசங்களோடு போட்டிபோட்டுப் புதிய கைத்தொழில்களை ஸ்தாபிக்கப்பெரும பிரயத்தனங்கள் செய்வதற்கு முன் ஏற்கனவே இருக்கிற கைத்தொழில்களை உயிர்ப்பித்து விருத்திசெய்ய முயலவேண்டும். நெசவு வஸ்திரங்களை நமக்கு மாத்திரம் செய்துகொண்டால் போதாது, அதற்கு ஏற்றுமதி வர்த்தகத்தையும் நாம் திரும்ப உண்டாக்கவேண்டும். ஆனால் தற்காலத்து நாகரீகத்தில் முழுகியிருக்கும் இந்தியர்களுக்கு "ருசி" என்பதே சுத்தமாய்ப் போய்விட்டபடியால் மேற்சொல்லிய உத்தேசமானது நிறைவேறுவதற்குக் கொஞ்சங்கூட முடியாமலிருக்கின்றது.

இனி சங்கீத வாத்தியங்களைப்பற்றி யோசிப்போம். வருடந்தோறும் சுமார் 20 லட்சம் பெறுமான வாத்தியங்கள் இறக்குமதியாகின்றன. அவை பியானோ, பிடில், ஹார்மோனியம், கிராமோபோன் முதலிய ஐரோப்பிய வாத்தியங்களே. (ஐயோ கிராமோபோனைக்கூட சங்கீத வாத்தியமென்று சொல்லவேண்டியிருக்கிறதே! அது கேவலம் ஒரு சாஸ்திர சம்பந்தமான கருவியும், குழந்தையின் விளையாட்டுச்சாமானுமாய் மாத்திரமே இருக்கக்கூடுமே தவிர வேறென்ன?) இவ்வெல்லா கருவிகளுக்குள்ளும ஹார்மோனியமே விசேஷமாய் எங்கு பார்த்தாலும் பரவி இந்திய சங்கீதத்தையும், இந்திய வாத்தியங்களையும் தள்ளுபடியாக்கிக்கொண்டு ஓங்கிவருகிறது. தென்னிந்தியாவிலே தஞ்சாவூரை விட்டால் வேறெங்கும் சுதேச வாத்தியக்கருவிகள் அகப்படா, அங்கே கூட இந்த வர்த்தகம் இப்பொழுது க்ஷீணித்துக்கொண்டு வருகிறது. மற்ற சுதேசக்கலைகள் விஷயமாயும், கைத்தொழில் விஷயமாயுங்கூட நாம் இவ்விதமாகவே சமீபத்திலுள்ளதை அசட்டை செய்துவிட்டு நமக்குத்தெரியாததும், லாபகரமாயும் அனுகூலமாயும் உபயோகப்படுத்த முடியாததுமான வெளிநாட்டு வஸ்துக்களைத்தேடி செல்கின்றோம். இந்த ஸ்திதியில் நாம் ஏழைகளாயிருப்பது ஆச்சரியமல்லவோ. ஆனால் இன்னும் அவலட்சணமானதென்னவென்றால், நாம் புத்தியிலும் ரசஞ்ஞானத்திலும் கூடக்கரம்பு பற்றிவருகின்றோம்.

ஆகவே இந்த கைத்தொழில் முயற்சியில் மேலிட்டு நிற்கும் சுத்த வர்த்தக உணர்ச்சியையே நாம் குறை கூறவேண்டியிருக்கிறது. நாம் நம்தேசத்து வஸ்துக்களை உபயோகிப்பது நமது

கடமையாயிற்றே. ஆகையால் உபயோகிக்கவேண்டுமென்ற கஷ்ட உணர்ச்சி காரணமாயிருக்கக்கூடாது; ஆனால் அவை சிரேஷ்டமானவையென்றும், நமது குறைகளை தீர்ப்பதற்கு அவைகளே ஏற்றவையென்றும், நாம் இன்னாரென்ற நம் சுயரூபத்தை எடுத்துக்காட்டுவதற்கு அவைகளே பொருந்தியிருக்கின்றனவென்றும் நாம் உணரும் உணர்ச்சியே நமது கைத்தொழில் முயற்சிக்குக் காரணமாயிருக்கவேண்டும்.

இனி இம்முயற்சியின் மற்றோர் அம்சத்தைப்பற்றி யோசிப்போம். நாம் மேற்கு தேசங்களோடு போட்டிபோட்டு இங்கிலாந்திலுள்ளதுபோன்ற வர்த்தகசாலை (Factory) ஒழுங்கை ஏற்படுத்தி, தொழில் விளைவிக்கு சாதனமான பணத்துக்குப் பணக்கார முதலாளிகளை சொந்தக்காரராய்ச் செய்துவிடுவோமா? ஐரோப்பா கண்டத்தின் கைத்தொழில் சரித்திரத்தை பரிசீலனம் செய்ய இங்கே இடமில்லை. ஆனால் அது மொத்தத்தில் விசனகரமானதென்று சொல்லலாம். மேற்கு பிராந்தியமானது அங்கு வழங்கிவரும் பாக்டெரி முதலிய வர்த்தக ஒழுங்குகளின் மகா கொடிய தீமைகளினின்று இப்பொழுதுதான் மெல்ல மெல்லத் தன்னை விடுவித்துக்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. நல்ல நிலைமைக்கு வருவதற்குவேண்டிய அறிகுறிகள் மேற்கு பிராந்தியங்களில் இல்லாமலில்லை.

டென்மார்க்கில் விவசாயிகளுக்குப்பள்ளிக்கூடங்கள்.

(முன் தொடர்ச்சி)

பள்ளிக்கூடச் சம்பளம்.

எல்லா மாணவர்களும் சம்பளம்கொடுக்க வேண்டிய கட்டாயமுண்டு. சம்பள விகிதமும் வெகு குறைவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பரீக்ஷை யோக்கியதா பத்திரங்கள் இல்லை.

இப்பள்ளிக்கூடங்களில் பரீக்ஷையே இல்லை வாய் வார்த்தையாகக் கூடப்பையன்கள் பரீக்ஷிக்கப்படக்கூடாதென்பதே, இக்கலாசாலை ஸ்தாபகரின் அபிப்பிராயம். எல்லாரையும் சேர்த்துக்கேள்வி கேட்கப்படுமேயன்றி ஒரு மாணவனை மட்டும் கேள்விகேட்டுப் பரீக்ஷிப்பதென்பதில்லை.

மாணவர்களுக்கு யோக்கியதாப் பத்திரங்களும் கொடுப்பதில்லை. இவர்களுக்குப்பரீக்ஷை வைத்து இவர்களை கோபன்ஹேகன் பட்டணத்து விவசாய கலாசாலைகளில் சேர்க்கும்படி உத்தர விடப்பட்டது. அப்போது அக்கலாசாலைகளின் ஸ்தாபகர் சொன்ன பதிலின் சாராம்சம். பின்வருமாறு:—

199040
m2118, N16TV
N16·1·3

"மாணவர்களுக்குப் பரீக்ஷையினுல் ஆகவேண்டுவதில்லை. விவசாய விஷயத்தைக் குறித்து விசாலமான பிரசங்க மூலமாய் அவர்கள் மனதில் தேசாபிமானத்தை எழுப்பி, தேசீய சரித்திரத்தினுல் அவர் மனதில் கிளர்ச்சி யுண்டுபண்ண வேண்டுமென்பதே என்னுடைய நோக்கம். தேவாலய பாதிரிமார் மதபோதனையாக எது செய்துகொண்டிருக்கிருரோ, அதுபோல் தேசத்திற்குற்ற நன்மையை சரித்திரபோதனை முதலியவற்றினுல் நான் செய்துகொண்டு வருகிறேன். அதனுல் கணிதம். இலக்கணம் முதலியவற்றை நான் இகழவில்லை. அவற்றைப்பின்னிட்டு மாணவன் தானே அறிந்துகொள்வான். ஆகையால் பரீக்ஷையை உத்தேசித்து பிள்ளைகளை நான் தயாரிக்கவில்லை."

பள்ளிக்கூடங்களின் சங்கியை.

இப்பள்ளிக்கூடங்களில் ராஜீய விஷயங்களும் கிறிது கற்பிக்கப்படுமாறு ஏற்பாடு செய்யப்படுகிறது. இம்மாதிரி ஸ்கூல்கள் டென்மார்க்கில் 80 இருக்கின்றன மேற்கூறிய மிஸ்டர் கிரண்ட்விக்கின் சிஷ்யர்களே இந்த ஸ்கூல்களின் டைரக்டர்களாயிருக்கிருர்கள். இப்பள்ளிக்கூடங்களில் இந்நகரத்துக் குடியானவர்களின் குமாரர்களும் குமாரிகளும் சேர்ந்து பயிற்சி பெறுகிருர்கள். பள்ளிக்கூடத்தில் வாசிக்கச் சம்பளம் கட்டவேண்டிய அவசியமிருப்பதனுல், ஏழைக்குடியானவர்கள் விவசாயக் கூலிகள் முதலிய சிலருக்கு இப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க முடிவதில்லை. ஆனுல் அவர்களுக்கும் இம்மாதிரி பள்ளிக்கூடங்கள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன.

பயிற்சி பெறும் தன்மை.

இப்பள்ளிக்கூடங்களில், பூகோள சாஸ்திரம், சரித்திரம், டேனிஷ் பாஷை, இயற்கை சாஸ்திரம். ரசாயன சாஸ்திரம் இவைகளில் சில வேளைகளில் வாதங்கள் நடந்தேறும்; மாணவர்கள் இவ்வாதம் நடக்கும் மாரி காலங்களில் இப்பள்ளிக்கூடஙகளுக்கு வந்து சில விவாதங்களைக் கேட்டு, மாணவர் வீட்டுக்குப்போய் சாவகாசமாய் நாட்டிலிருக்கும் புஸ்தகசாலைகள் சென்று அங்கு புஸ்தகங்களை வாசித்து, விசேஷமாய்த் தம் அறிவைப் பெருக்கிக்கொள்ளுகிருர்கள். ஒரே புஸ்தகத்தை நெட்டுருப் போட்டுத் தள்ளுவதைக் காட்டிலும் இம்மாதிரி வாதங்களினுல் பிள்ளைகள் அடையும் நன்மை அதிகமென்பதே பள்ளிக்கூட ஸ்தாபகரின் அபிப்பிராயம். பள்ளிக்கூடம், இருக்கும் ஸ்தலங்களுக்குத் தகுந்தாற்போல் விவசாயப் பயிற்சியைப் போதகர்கள் செய்கிருர்கள்.

ஆசார்ய, சிஷ்யர்கள் நடந்துகொள்ளும் விதம்.

இப்பள்ளிக்கூடத்தை நடத்தும் டைரக்டர்கள் புரொபஸர்கள் மாணுக்கர்களை வெகு கடுமையாய் நடத்துவதேயில்லை. அதனுல் அவர்கள் உபாத்தியாயர்களிடத்து மரியாதை தப்பி நடந்துகொள்வதுமில்லை. உபாத்தியாயர்கள் பையன்களுடன் கலந்து ஆஹாரங்கொள்வதும், பையன்கள் எப்பொழுதும் உபாத்தியாயர்களிடம் கூச்சப்படாமல் அணுகிச் சந்தேகம் தெளிந்து கொள்வதும் சகஜம்.

ஒரு சீமாட்டியின் அபிப்பிராயம்.

இப்பள்ளிக்கூடங்களை வந்து பார்க்க ஐரோப்பா தேசத்து மூலை முடுக்குகளிலுள்ள கல்விமான்கள் பலர் அடிக்கடி இங்கு வந்து போவார்கள். ஒரு பிரெஞ்சு சீமாட்டி டேனிஷ் பாஷையையும் அவர்களின் கல்வி முறையையும் கற்க இந்நாட்டுக்கு வந்தார். அவர் பார்த்தபடி 200-சிறு பெண்மணிகள் முதற்கொண்டு மேற்கூறிய பள்ளிக்கூடங்களில் பிரசங்கங்கள் பலவற்றை உற்றுக்கேட்டு மனத்திற் பதித்துக் கொள்வதைப்பற்றியும் அவர்கள் பாட்டுகளுடன் கூடிய தேகப்பயிற்சி செய்யும் முறையையும் வியந்து எழுதியிருக்கிறார்.

ஆஸ்கோப் யூனிவர்ஸிடி.

இந்த ஹைஸ்கூல்களில் படித்த படிப்பை விருத்தி செய்து கொள்ள ஒருவா விரும்பினால் இவர்கள் க்ரண்ட்விக்கினால் ஸ்தாபிக்கப்பட்ட ஆஸ்கோப் யூனிவர்ஸிடி சென்று படிக்கவேண்டும். இங்கேயே மேற்கூறிய ஹைஸ்கூல்களில் உபாத்தியாயராக வரக்கூடிய போதகர்கள் பழக்கப்படுகிறார்கள். இங்கு இயற்கை சாஸ்திரங்கள, கணித சாஸ்திரங்கள முதலியன பலபடிகளில் உயர்ந்தனவாய்ச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இங்கு முதன் முதலில் ரசாயன சாஸ்திரங்களில் ஆரம்பப்படிப்பைச் சொல்லிக்கொடுத்த பின் அந்த சாஸ்திரக்ஞர்களின் சரித்திரங்களையும் அவர்கள் கண்டுபிடித்த உலகத்துக்கு உதவின விஷயங்களையும் நுணுக்கமாய்ச் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

முடிவுரை.

இப்படியாக டென்மார்க்கு தேசத்தில் விவசாயக் கலாசாலைகள் எற்பட்டதனாலன்றோ, அந்நாடு விவசாய உலகத்தில் சிறந்த தேசமாக மதிக்கப்படுகிறது. கல்வியே விசேஷ சௌக்கியத்தைக் கொடுப்பது. எல்லாருக்கும் உயிர்போன்றது கல்வியே. நம்முடைய நாட்டு விவசாயிகளுக்குக் கற்றுக்கொடுக்கும் கல்வி மிகவும் குறைச்சலாயிருக்கிறது. நம் கிராமாந்தரக்குடியானவர்கள் விருத்தியடையவேண்டுமானால், நம் நாட்டில் விவசாயம் விருத்தியடையவேண்டுமானால், இந்தியாவில் ஒவ்வொரு கிராமங்கள் குக்கிராமங்கள் தோறும் விவசாயப் பள்ளிக்கூடங்கள் எற்படுத்தப்படவேண்டும். டென்மார்க்கு என்னும் விவசாய தேசம்போல் இந்தியா விருத்தியடைய வேண்டுமானால், நமது நாட்டுத் தேசாபிமானிகள் நிலச்சுவான்தாரர்கள் தமது கவனத்தைத் தீவிரமாய்ச் செலுத்தி இது விஷயத்தில் தக்கது செய்யவேண்டும்.

மதுரை தமிழ்ச்சங்கம்.

மதுரை தமிழ்ச்சங்கத்தின் 15-வது வருஷாந்தக்கொண்டாட்டமானது சென்ற மே-மீ 18-ந்தேதியன்று மாலையில் மதுரையில் நடைபெற்றது. மாகாண கான்பரன்ஸுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் பலரும் அக்கொண்டாட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர். ராவ்

பகதூர் பி. ஐ. சின்னசாமிபிள்ளை அக்கிராசனம் வகித்தார். கொண்டாட்டத்திற்கு வந்திருந்த பண்டிதர்களை ராமனாதபுரம் ராஜா வரவேற்றுப்பேசியதும் சங்கக்கட்டிடத்திற்குவேண்டிய 30-ஆயிரம் ரூபாயிலே 18 ஆயிரம் ரூபாய் சேர்ந்திருக்கிறதென்றும் குறிப்பிட்டார். மகாமகோபாத்தியாய சுவாமிநாதய்யர் பேசினபொழுது செந்தமிழ்ப்பத்திரிகைக்கு 250 சந்தாதார்களே இருக்கின்றனர் என்று விசனத்துடன் குறிப்பிட்டார். சங்கத்தின் சென்ற வருஷாந்தர ரிப்போர்ட்டை மிஸ்டர் டி. சி. ஸ்ரீனிவாசய்யங்கார் வாசித்தார்.

மிஸ்டர் என். சுப்பராவ்.

அச்சமயம் மிஸ்டர் என். சுப்பராவ் பேசியதின் ஸாராம்சம் என்னவென்றால்:—

தெலுங்கு பாஷையானது பெரிதும் விருத்தியடைந்திருக்கிறது. அப்பாஷையில் இலகுவான நடையில் நூல்கள் எழுதப்பட்டுள்ளன. தற்காலத்திற்கேற்ற லளிதமான நடையில் நூல் எழுதுபவர்களுக்கு பரிசுகள் கொடுக்கவும் ஒரு சபை ஏற்பட்டிருப்பதால் நல்ல பலனுண்டு. தமிழ்ச்சங்கமும் நல்ல வேலை செய்து வருவதாகத்தெரிந்து சந்தோஷப்படுகிறேன். தற்காலத்திற்கேற்றபடி சுலபமான வசன நடையில் நூல்கள் இருக்கவேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்.

கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி.

மேலே கண்டவாறு மிஸ்டர் ராவ் பேசியதும், கனம் சாஸ்திரியார் பேசியதாவது:—

தமிழ்நாட்டில் தமிழ்பாஷையினிடம் ஜனங்களுக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறதோ அதைவிட இதர தேசங்களில் தேசபாஷைகளுக்கு அதிக கவனமும் பிரியமும் செலுத்தப்படுகின்றன. வங்காளத்திலும் கூர்ச்சரத்திலும், சாஸ்திர காவியங்கள் தேசபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அப்பாகங்களில் என்னைச்சிலர் தமிழின் நிலைமை எப்படியிருக்கிறதென்று கேட்டபொழுது பதில்சொல்ல எனக்கு வெட்கமாயிருந்தது. ஹைஸ்கூல்களிலே சரித்திரமும், சாஸ்திரமும் தேசபாஷையிலேயே போதிக்கப்படவேண்டும். இதற்கு கவர்ன்மெண்டார் ஜனங்கள் ஆகிய இருவருடைய ஆதரவும் வேண்டும்.

கனம் கேசவப்பிள்ளை.

பின்பு கனம் கேசவப்பிள்ளை பேசியதாவது:—

தமிழ்ப்பயிற்சியை மறுபடியும் தலையெடுக்க தமிழ்ச்சங்கம் செய்துவரும் முயற்சிகளைச்சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறேன்.

சங்க காரியங்களில் ராமனாதபுரம் ராஜாவுக்குமிக்க சிரத்தையிருந்து வருகிறது. தமிழிலே ஜனங்களுக்கு இலகுவான வசன நடையில் நூல்கள் இருக்கவேண்டும்.

இவ்விதம் அவர் பேசியதும், மீட்டிங்குகளில் தேச பாஷையிலேயே பேசவேண்டுமென்றும், தேசபாஷைகளிலேயே கடிதம் எழுதவேண்டுமென்றும் சாது கணபதி பந்துலு சொன்னார்.

அக்கிராசனாதிபதியின் பேச்சு.

முடிவில் அக்கிராசனாதிபதி பேசியதென்னவென்றால்:—

தமிழ்ப்பாஷையானது புராதனமானதென்று பாஷாதத்துவ மேதாவிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ருஷியாவின் வடகோடியிலுள்ள பின்னெட் என்ற நாட்டிலிருந்து, ஆஸ்டிரேலியா வரையில் திராவிட பாஷைகள் பேசப்பட்டு வந்ததாக டாக்டர் கிரேஸன் என்பவர் எழுதியுள்ள நூலில் காணப்படுகிறது. தமிழ்ப்பாஷையானது அரைகுறையானதென்று சிலர் சொல்லுகின்றனர் அன்னிய பாஷைகளிலிருந்து வார்த்தைகளை அப்படியே தமிழில் எடுத்துக்கொண்டு உபயோகிக்கவேண்டும். தற்காலம் பல புத்தகங்கள் தமிழில் வெளிவருவதால், நல்ல புத்தகங்களையே இச்சங்கத்தார் அங்கீகரிக்கவேண்டும். தேவஸ்தானங்களாலும் மடங்களாலும் தமிழ்ப்பாடசாலைகள் நடத்தப்படவேண்டும். தமிழ்ப்பண்டிதர்களை மடாதிபதிகள் ஆதரித்து வரவேண்டும்.

இவ்விதம் அவர் பேசியதும், யாவருக்கும் சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்டதும், சபை கலைந்தது.

வர்த்தமானக் குறிப்புகள்.

ஜில்லா கான்பரேன்சுகள்:—சென்ற மீ 21, 22, தேதிகளில் திருப்பூரில் கூடியே கான்பரென்சுகளின் நடவடிக்கைகள் முழுவதும் தமிழிலே நடைபெற்றன. அங்கு விஜயஞ்செய்திருந்த ஏராளமான கிராமவாசிகள் அனைவரும் வெகு உற்சாகத்துடனிருந்ததை கவனிக்கும்பொழுது, சமுக வாழ்க்கையில் தாங்கள் முன்னேற்றமடையவேண்டுமென்று ஆவல்கொண்டிருப்பதை தெள்ளென விளக்குகிறது பிரதிநிதிகளுக்கு போஜனம், விடுதிகள், முதலியன நன்கு கவனிக்கப்பட்டது கோயமுத்தூர் ஸ்ரீமான் கே. சண்முகம் அவர்களின் மேற்பார்வையின் கீழ்நடத்தப்பட்ட

கௌரவ ஊழியர்கள் காட்டிய பணிவும், உபசரிப்பும் பெருமை பாராட்டக் கூடியதேயாகும்.

தேவாங்க வாலிப சகோதரத்வ சங்கம்:—இச்சங்கத்தில் இரண்டாம் ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம் சென்ற மீ 24 தேதி மாலை கோயமுத்தூர் இந்து கலாசாலையில் சென்னை ஸ்ரீமான் ராய்பகதூர் பி. தியாகராய செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் விமரிசையாய் நடைபெற்றது.

திருப்பூர் விவசாய கைத்தொழிற் காட்சி:—இம்மாதம் 15, 16, 17, தேதிகளில் கனம் பகளி அக்கிராசனத்தின் கீழ் விமரிசையாய் நடைபெற்றது. நமது மாகாணப் பிரதி காவலராகிய பெண்லண்டு பட்டவர்த்தனர் வேறு அலுவலினிமித்தம் வரவில்லை. ஜில்லா தலைமை அதிகாரிகளும் பாலக்காடு ஸ்ரீமான் ராவ் பகதூர் பி. ஐ. சின்னசாமி பிள்ளை ஸ்ரீமான் ராவ்பகதூர் எம். ஜி. ஆரோக்கியசாமி பிள்ளை சேலம் கனம் பி. வி. நரசிம்ம அய்யர் முதலிய கனவான்களும் ஜில்லா வாசிகளில் பலரும் விஜயஞ் செய்திருந்தனர். அநேகவித உள்நாட்டு விளைபொருள்களும் செயற்கைப்பொருள்களும், நல்ல ஜாதி மாடுகளும் கொண்டுவரப்பட்டிருந்தன. பழயகோட்டை பட்டக்காரர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருந்த நல்ல ஜாதி மாடுகளைப் பார்க்கும் பொழுது, நம் மிந்தியா தேசத்தின் பூர்வீக மேன்மை இத்தன்மையதென புலப்படுகின்றது.

விவசாய, கைத்தொழில் சம்பந்தமான உபன்யாசங்கள் தமிழிலேயே நடைபெற்றன. இக்காட்சி இனிது நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்த ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம்செட்டியாரவர்களின் முயற்சி பாராட்டததக்கதேயாம்.

ஈரோடு தாலூக்கா ரெட்டிமார் கான்பரேன்ஸ்:—இம்மாதம் 18 தேதியன்று சாமராஜபாளையம் மாரியம்மன் ஆலயத்தில், உடையம் ஸ்ரீமான வெங்கிட்டரேட்டியாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் விமரிசையாய் நடந்தேறியது. ராஜபக்தி, யுத்தத்தில் வெற்றி, காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய அய்யருக்காக அநுதாபம், கல்வி முதலியவைகளைப்பற்றிய தீர்மானங்கள் செய்யப்பட்டன.

* * *

பிரதி ஸ்த்ரீயிடமிருந்தும் சற்புத்ரர்களை இந்திய மாதா தனது ஸேவைக்கு எதிர் பார்க்கிருள்.

மிஸஸ் பெஸன்ட்.

நமது பத்திரிகையைப்பற்றி சுதேசமித்திரன் பத்திராதிபரின் அபிப்பிராயம்.

திருவள்ளுவர்.

இப்பெயர் கொண்ட மாதப் பத்திரிகையொன்று வரப்பெற்ரோம். கோயமுத்தூரில் மிஸ்டர் கே. எஸ். சுப்பிரமணியபிள்ளையால் அது பிரசுரம் செய்யப்படுகிறது. பல வகைப்பட்ட ருசியுள்ளவர்களும் படிக்கத்தக்க வியாசங்கள் அதில் நிறைந்துள்ளன. மிஸ்டர் சுப்பிரமணிய பிள்ளை பொது நன்மையில் மிக்க ஊக்கமுள்ளவராகையால் பத்திரிகை நன்கு நடைபெறுமென்று நம்புகிறோம். வருஷ சந்தா ஒரே ரூபாய்.

சுதேசமித்திரன் 26–6–1916.

யுக்திக்குறிப்புகள்.

ராமன்:— உன்னுடைய பெண் சங்கீதத்தில் மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்ளுகிறாள்.

கிருஷ்ணன்:— அல்ல, அல்ல, என்னுடைய பெண் சங்கீதத்துக்கு மிகுந்த சிரமம் கொடுக்கிறாள்.

கந்தன்:— நீர் புது வீடு கட்டுகிறதாய்க் கேள்விப்படுகிறேன்.

முகுந்தன்:— பழய வீடு கட்டுகிறவாடிக்கையில்லை. ஆதலின் புது வீடுதான் கட்டிக்கொண்டிருக்கிறேன்.

பலசரக்கு.

சுடாத வடையைக் காய்ந்த எண்ணெயிற் போடும்போது படபடவென்று சப்தமுண்டாகிறது. வடைநன்றாக சுட்டுவிட்டால் சப்தம் ஓய்ந்து விடுகிறது. அதுபோல் ஞானத்தையடை-யும்வரை மனுஷியன் அங்குமிங்கும் ஓடிப்பிரசங்கம் செய்து புறமதங்களைத் தூஷித்து வீண்கூச்சல் போடுகிறான். ஞானம் உண்டானால் பிறகு எல்லாக் கூச்சலும் அடங்கி மௌனியாகிறா

உபசரணைப் பத்திரம்.

[இம்மாதம் 18-உ சாமராஜபாளையத்தில் கூடிய ஈரோடு தாலூக்கா ரெட்டிமார் கான்பரென்சில், இக்கான்பரென்சின் செகரேட்டரியாகிய ஸ்ரீமான் ஜங்கமரெட்டியாரவர்களால்வாசிக்கப்பட்டது]

கனவான்களே!

இன்று இச்சபைக்கு நம்முடைய வேண்டுகோளின்படிக்கு தங்களுக்குள்ள சிரமத்தை பாராட்டாமல் இங்கு விஜயஞ்செய்த ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு ஸ்ரீமான் கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை முதலிய இருவர்களையும் பற்றி சில வார்த்தைகள் சொல்லுவது அவசியமாயிருப்பதால் அதை சொல்ல முன்வருகிறேன். வரதராஜுலு நாயுடு திருப்பூரில் ஒரு ஆயுர்வேத தர்ம வைத்திய சாலை ஒன்று வைத்து நடத்திவருகிறார். பொது விஷயங்களில் மிகவும் அக்கரையுள்ளவர். சிறந்த தேசாபிமானி. அமெரிக்கா தேசத்து மெஸ்மெரிசம் என்னும் வித்தையில் மிகவும் தேர்ந்தவர். நேற்றையதினம் தாராபுரம் விவேகானந்த ஸ்வாமிகளின் சங்கத்திற்காக போகவேண்டியிருந்ததை விட்டு நம்முடைய ஊருக்கு வந்ததே அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. எனது நண்பர் கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் தகப்பனார் கோயமுத்தூர் காலேஜியில் தமிழ் பண்டிதராயிருந்தவர் அவர் பிள்ளைகளுக்கு மாத்திரம் கற்பித்தார். இவர் ஊராருக்கே கற்றுக்கொடுப்பதற்காக "திருவள்ளுவர்" என்னும் பத்திரிகையை நடத்திவருவது கனவான்களுக்குத் தெரிந்த விஷயம். இத்துடன் காலஞ்சென்ற நமது தேசாபிமானியாகிய ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யரவர்களால் நடத்தி வந்த சுதேசமித்திரன் என்ற பத்திரிகைக்கு நீண்ட காலமாய் ரிப்போர்ட்டராயிருந்து வருகிறார். டம்பத்துக்காக ஆசைப்படாமல், பொது விஷயத்தில் மிகவும் அக்கரையுள்ளவர். நமது ஜில்லா கான்பரென்சுக்காக திருப்பூருக்கு போயிருந்ததில் அங்கு அவர் பிரசங்கத்தை பார்த்ததில்பொது விஷயத்துக்காக உழைப்பவர் என்று தெரியவந்தது. நம்முடைய வேண்டுகோளுக்கிணங்கி இங்கு விஜயம் செய்ததற்காக அவருக்கு வந்தனம் செலுத்துவதுடன் அடிக்கடி வந்திருந்து நம்முடைய சபையை சீராய் நடத்திக்கொடுக்கும்படியாயும் நாம் அவரை வந்தனத்துடன் கேட்டுக்கொள்ள வேண்டும்.

18—6—16.
சாமராஜபாளையம்.

எஸ். வி. ஜங்கமரெட்டி.

இனாம்! …ம்!! இனாம்!!!

தற்சமயம் நடக்கு… …ப்பிய யுத்தத்தினால் இங்கி தினுசுகள் கிடைக்காமல் அ… …ம் கஷ்டப்படுவதை உத்தேசித்து பலவித இங்கி தினுசுகளுட… …யமாக இந்தியச் சரக்குகளைக் கொண்டு தயார் செய்து சுவல்ப விலைக்கு விற்று வருகிறோம்.

புளூ பிளாக் இங்கு பவுடர்.

1—சேர் அதாவது 24 ரூபாய் எடையுள்ள இங்கி பவுடர் எந்த விலாசத்திற்கும் ஒருமுறை இனாமாக அனுப்பப்படும். அதைக்கொண்டு மூன்றுபெரிய புட்டிகள் நிரம்ப இங்கி செய்து கொள்ள முடியும். தபால் சிலவு பாக்கிங் சிலவு முதலியவற்றிற்காக முன்னதாகவே நாலணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பமுடியாது. விலாசம்,

மானேஜர்,

கோகலே சுதேச வர்த்தக ஏஜண்ஸி,

கோயமுத்தூர்.

திருவள்… …வர்.

மாதாந்திரத் தமிழ் சஞ்சி…கை.

இதில் கல்வி, கைத்தொழில், விவசாய… …யாபாரம், சுகாதார விதிகள், சீர்திருத்த முறைகள், பெரியோரது சரிதங்கள், வர்த்தமானங்கள், பொதுநலக்குறிப்புகள், பாலர்க்கும் பாலிகைகளுக்கும் உபயோகப்படத்தக்க விதிகள், சுருங்கச்சொல்லின் தேசக்ஷேமாபிவிருத்திக்குரிய சகல அம்சங்களும் பொருந்தி, எளிய செந்தமிழ் நடையில் தகுந்த கல்வியாளரால் எழுதி நடத்தப்பட்டு வருகிறது.

இதனை அனைவரும் வாங்கி வாசித்துப்பயன்படுமாறு குறைந்த சந்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வருஷ சந்தா ரூ 1. தபாற்கூலி அணா 2.

1—வருஷத்திற்கு ரூ 3-வீதம் கொடுப்பவர்கள் அபிமானி…வர். ரூபாய் 50 அல்லது அதிகம் கொடுப்பவர் போஷகர்

மானேஜர்,

"திருவள்ளுவர்" கோயமுத்தூர்.